# மக்களைக் கொலை செய்தவர் முழுக்காட்டப்பட்டார்! [9:10-19; 22:10, 12-16; 26:19]

*சில வருடங்களுக்கு முன்பு, கொலைகாரனான ஜெஃப்ரீ தாமர் என்ற நபருக்குத் தரப்பட்ட தண்டனைத் தீர்ப்பு தலைப்புச் செய்தியாயிருந்தது. அந்நபர் சமீபத்தில் ஞானஸ் நானம் பெற்றதும் கூட, செய்தி பரப்பும் வழிமுறைகளின் கவனத்தைக் கவர்ந்தது.*

*விர்ஜினியாவைச் சேர்ந்த அர்லிங்டன் என்ற ஊரிலிருந்த மேரி மோட் என்ற கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரி, தாமர் மற்றும் அவர் தகப்பனார் ஆகியோருடைய நேர்முகப் பேட்டி யொன்றைத் தொலைக் காட்சியில் பார்த்தார்கள். அச்சகோதரி, "இவ்விரண்டு மனிதர்களும் தங்கள் வாழ்வில் ஒரு வெறுமை யைப் பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் ஏதோ ஒன்றைச் சென்று அடைந்திருக்கின்றார்கள், அது என்ன என்பதை அவர்கள் அறியாமலும் இருக்கின்றார்கள்'' என்று எண்ணினார்கள். அச்சகோதரி, அவர்களுக்கு ஒரு கடிதம், உலக வேதாகமப் பள்ளியின் தபால் பாடம் மற்றும் ஒரு வேதாகமம் ஆகியவற்றை அனுப்பி வைத்தார்கள். அதே வேளையில் ஒக்லஹாமாவின் கிரெசென்ட் என்ற இடத்தைச் சேர்ந்த கர்ட்டிஸ் பூத் என்ற கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரரும் தாமருக்கு ஒரு பாடத்தை அனுப்பினார். இந்த இரண்டு பாடங்களையும் தாமர் படித்து முடித்து, மோட், பூத் ஆகிய இருவருக்குமே கடிதங்கள் எழுதி, தமக்கு ஞானஸ்நானம் செய்விக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்.*

*விஸ்கான்ஸினைச் சேர்ந்த மேடிஸன் என்ற இடத்தில்*

கர்த்தருடைய சபையில் ஒரு பிரசங்கியாராக இருந்த ராய் ரேட்கிளிஃப் அவர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அவர் தாமருடன் பேசி, தேவையான ஏற்பாடுகள் யாவையும் செய்து முடித்த பிறகு, சிறைச் சாலையிலிருந்த நீர்த் தொட்டி யில் தாமரை முழுக்காட்டினார். தொடர்ந்து வந்த மாதங்களில் ரேட்கிளிஃப் தொடர்ந்து தாமருக்கு வேதாகம வகுப்புகள் நடத்தினார் (இருவரும் அமர்ந்து வேதத்தைக் கற்றார்கள்). ரேட்கிளிஃப் அவர்கள் சமீபத்தில் பின்வருமாறு எழுதினார்:

> ஜெஃப்பினுடைய உண்மையைப் பற்றி ஏறக்குறைய ஒவ்வொருவரும் கேள்வியை எழுப்புகின்றார்கள். ஆனால் நான் அங்கிருந்தேன், கேள்வி கேட்கின்ற இவர்களில் யாரும் அங்கு இருந்ததில்லை ... அவர் தமது விருப்பத்தில் உண்மையுள்ள வராய் இருந்தார் என்பதை நான் நம்புகின்றேன் ... அவர், தாம் சிறையில் மரிக்கப் போகும் உண்மையை ஏற்றுக் கொண்டி ருந்தார். ஜெஃப், தமது ஞானஸ்நானத்தினால் இவ்வுலகத்தில் எந்த ஆதாயமும் பெறவில்லை; அடுத்த வாழ்க்கையில்தான் அவர் ஆதாயமாகப் பெறும் ஒவ்வொன்றும் இருக்கின்றது.

நன்றி செலுத்தும் நாளுக்கு முந்திய நாளில் ரேட்கிளிஃப் அவர்கள், தாமருடன் இணைந்து வேதாகமத்தைப் படித்தார். ஐந்து நாட்களுக்குப் பின்பு, நவம்பர் 28, 1994ல் தாமர் தம்முடன் சிறையிலிருந்த சக கைதியொருவரால் அடித்துக் கொல்லப்பட்டார்.

தாமர் உண்மையிலேயே இரட்சிக்கப்பட்டாரா இல்லையா என்பது பற்றி மேரி மோட்டின் எண்ணம் குறித்துக் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், “பவுல், தாம் மாறி விட்ட தாகக் கிறிஸ்தவர்களை நம்பச் செய்வதில் இடர்ப்பாடு அடைந்தார் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் அவருடைய உண்மைத்தன்மை பற்றி நாம் இன்று கேள்வி கேட்பதில்லை” என்று கூறினார்கள்.

ஜெஃப்ரி தாமர் மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல்- இவ்விருவருக்கும் இடையில் ஒற்றுமைகள் இருக்க முடியுமா? முதலில் நாம் “இல்லை!” என்று மிகவும் அழுத்தமாகப் பதில் தருகிறோம். பேசப்பட முடியாத செயல்பாடுகளும், மக்கள் பலரைக் கொலை செய்த குற்றமும் கொண்ட கொலைகாரன் ஒருவனை, வாழ்ந்தவர்களிலேயே மாபெரும் மனிதர்களில் ஒருவரான மனிதருடன் ஒப்பிடுவதென்பது ஏறக்குறைய

தேவதூஷணமாகவே காணப்படுகின்றது. பிறகு பவுல் தம்மை *"பிரதான"* பாவியென்று வகைப்படுத்தியதை (1 தீமோ. 1:15) நினைவுகூருகின்றோம்.

தாமர் மற்றும் பவுல் ஆகியோருக்கிடையில் அநேக ஒப்பீடுகளைக் காண முடியும். இவ்விருவருமே, ஒன்றுமறியாத பல மக்களின் மரணங்களுக்குக் காரணமாயிருந்தார்கள். இவ்விருவரின் மனமாற்றமும் எதிர்பாராததாக, ஏறக்குறைய அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. இவ்விருவருமே தாங்கள் மாறிவிட்டதை மற்றவர்கள் நம்பச் செய்வதில் இடர்ப்பாடு அடைந்திருந்தனர். இவ்விருவரின் ஞானஸ்நானத்திற்குப் பிறகு, மனிதர்கள் இவர்களின் வாழ்க்கையை முடிக்க முயற்சி செய்தனர். ஆயினும், மிகவும் குறிப்பிடத் தக்க விஷயம் என்னவென்றால், இவ்விருவரின் மனமாற்றமும், தேவனாலே "கூடாத காரியம் ஒன்றுமில்லை" என்பதற்குச் சாட்சியம் அளிக்கின்றன. தாமரும், பவுலும் இரட்சிக்கப்பட முடியும் என்றால், எவர் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியும்!

நமது கடந்த பாடத்தில் நாம், (1) அசைக்க முடியாத ஒரு திட நம்பிக்கை (கிறிஸ்தவத்தை ஒழிக்க வேண்டும் என்ற சவுலின் திட நம்பிக்கை), (2) எதிர்பாராத ஒரு சந்திப்பு (சாலையில் இயேசு அவருக்குத் தரிசனமானது) மற்றும் (3) வழக்கமற்ற ஒரு அறைகூவல் (புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும்படி இயேசு அவருக்கு அறைகூவல் விடுத்தது) ஆகியவற்றைக் கண்டோம். சவுல் தாம் கண்ட வெளிச்சத்தினால் பார்வையற்றுப் போனவராக, தமஸ்குவுக்கு வழிநடத்தப்பட்டு, நேர்த்தெரு என்று அழைக்கப்பட்ட தெருவிலிருந்த ஒரு வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இவ்வரலாற்றை இவ்விடத்தில் இருந்து நாம் மறுபடியும் தொடருவோம்.

## ஆர்வமில்லாத ஒரு கிறிஸ்தவர் *(9:10-17; 22:10, 12-16)*

கர்த்தர் சவுலை இருளில் - நேரடியான அர்த்தத்தில், ஆவிக்குரிய மற்றும் அறிவுடைமைக்குரிய இருளில் - மூன்று நாட்களுக்கு விட்டு வைத்தார்.[1] ஏன்? அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் மனம் வருந்திய வேறு எந்தப் பாவியும் இந்த வகையாக நடத்தப்பட்டிருக்கவில்லை, எனவே இதற்கு

ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும்.[2] உறுதிப்பாட்டின் "விலையைக் கணக்குப் பார்க்கும்படி" சவுலைக் கர்த்தர் இப்படி விட்டு வைத்திருக்கலாம் (லூக். 14:28-30); அவர் தமக்கு மதிப் புடையவைகள் ஒவ்வொன்றையும் தியாகம் செய்ய வேண்டி யிருந்தது (பிலி. 3:7). சவுலின் பார்வையற்ற தன்மையை யூதர்கள் பார்க்கும் பொழுது அது, அவரது மனந்திரும்புதல் நிறைவடைகின்றபோது, அவர்கள் மிகவும் மனவாஞ்சை யடையும்படியாகக் கர்த்தர் யூதர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கலாம்.

கொலை செய்து உபத்திரவப்படுத்தியரை அணுகுவதற்குப் போதுமான அளவு தைரியமுள்ள ஒரு பிரசங்கியாரைக் கண்டு பிடிக்கக் கர்த்தருக்கு மூன்று நாட்கள் தேவைப்பட்டது என்று நான் கூறுவதுண்டு. இது வேடிக்கைக்காகக் கூறப்பட்டது, ஏனென்றால் கர்த்தர் விரும்பியிருந்தால், மந்திரிக்காக ஒரு பிரசங்கியார் காத்திருந்தது போல, தமஸ்கு பட்டணத்தின் வாசல் அருகே ஒரு பிரசங்கியாரைக் காத்திருக்கப் பண்ணி யிருக்கலாம். நிறைவாகக் கர்த்தர் அந்தப் பிரசங்கியாரிடம்[3] சென்ற போது, அந்த மனிதர் சவுலிடம் செல்வதற்கு ஆர்வ மில்லாதவராக இருந்தார் என்பதும் உண்மையே ஆகும்.

தமஸ்குவிலே அனனியா[4] என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் [இயேசு] தரிசனமாகி: "அனனியாவே", என்றார். அவன்: "ஆண்டவரே, இதோ, அடியேன்" என்றான் (9:10). அதிகாரம் 5ல் வந்த, பணத்தை விரும்பும் அனனியாவுடன், தேவனுடைய இந்த உண்மையான பிள்ளையை நினைத்துக் குழப்பிக் கொள்ளாதீர்கள். இந்த அனனியா, "வேதப் பிரமாணத்தின்படியே பக்தியுள்ளவனும், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சி பெற்றவனுமாக" (22:12) இருந்தார்.[5] இயேசு அவருக்குத் தரிசனமான போது, முதலில் அவர் (அனனியா) நேர்மறை யாகவே பதில் அளித்தார். "ஆண்டவரே, இதோ, அடியேன்" (இ.வ. 1 சாமு. 3:1-18; ஏசாயா 6:8-13). அனனியா ஒரு எழுது கோலையும், எழுதும் தாள்களையும் தேடி எடுத்து, கர்த்தரு டைய அறிவுரைகளை எழுதத் தயாரானதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது (ரிக் ஆட்ச்லியின் பிரசங்கத்திலிருந்து தழுவப்பட்டது).

இயேசு, "நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட

*தெருவுக்குப் போய்" (9:11அ) என்று தொடங்கினார். அனனியா அதை "நேர்த்தெரு என்னப்பட்ட தெரு" என்று எழுதி, சரி பார்த்துக் கொண்டார்.*

*"யூதாவின் வீட்டிலே" (9:11ஆ).*

*"யூதாவின் வீட்டிலே" சரி பார்க்கப்பட்டது.*

*"... தர்சுப் பட்டணத்தானாகிய ..." (9:11இ).*

*அனனியா சற்றுத் தயக்கத்திற்குப் பின், "தர்சுப் பட்டணத் தானாகிய" என்று எழுதிச் சரி பார்த்துக் கொண்டதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது.*

*"... சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்; அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன் மேல் கை வைக்கவும் தரிசனங் கண்டான்" (9:11ஈ, 12).*

*அனனியா தமது எழுதுகோலைக் கீழே வைப்பதை நான் காணுகின்றேன். "சவுல் என்னும் பேருள்ள ஒரு மனிதனா? ஆண்டவரே, இந்த மனிதனைப் பற்றி நான் அறிவேன். நான் இந்த மனிதனைப் பற்றி உமக்குச் சொல்லுகின்றேன்!"*

> *அதற்கு அனனியா: "ஆண்டவரே, இந்த மனுஷனை எருசலேமிலுள்ள[6] உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற யாவரையும் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக் கிறானே" என்றான் (9:13, 14).*

*கர்த்தர் ஒரு கட்டளையைக் கொடுக்கும் போது, அவர் "இல்லை, முடியாது" என்ற பதிலைக் கேட்பதற்கு விரும்புவதில்லை. இயேசு ''போ'' என்ற தமது கட்டளையை ஒரு விளக்கத்துடன் சேர்த்து மறுபடியும் கொடுத்தார்:*

*சவுலை உபத்திரப்படுத்துபவர் என்பதாக அனனியா அழைத்தார், ஆனால் இயேசு கடந்த காலத்தைப் பார்ப்பதற்குப் பதிலாக எதிர்காலத்தைப் பார்த்தார். சவுலை ஒரு கொலைகாரராகப் பார்ப்பதற்குப் பதிலாக இயேசு "அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்.[7] அவன் என்னுடைய நாமத்தின்*

*நிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" (9:15, 16) என்றார்.*

*இயேசுவின் வார்த்தைகள், சவுலின் ஊழியத்தினுடைய "கடுந்துயர் மற்றும் பரவசம்" ஆகியவற்றைப் புறக்குறிப்பாகக் காட்டின: "பரவசம்" எனப்படுவது "புறஜாதிகள், ராஜாக்கள் மற்றும் இஸ்ரவேல் புத்திரர் முன்பாக" இயேசுவின் நாமத்தை அறிவிக்கும் பெருமையைக் குறிப்பிடும். இவ்விடத்தில் புறஜாதியார் முதன்முறையாகக் குறிப்பிடப்படுகின்றனர், ஏனென்றால் அது பவுலின் விசேஷித்த ஊழியமாயிருந்தது. அகிரிப்பா (25:23-26) மற்றும் நீரோ[8] ஆகியோர் உட்பட அநேக ராஜாக்களுக்கு முன்பாகப் பவுல் நிற்க வேண்டியதாயிருந்தது.*

*"கடுந்துயர்" எனப்படுவது, "அவன் என்னுடைய நாமத்தி னிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்"[9] என்ற இயேசுவின் வார்த்தை களில் பிரதிபலித்தது. இயேசுவின் வார்த்தைகளில் நேரெதிர்ப் பொருள் இருந்தது: உபத்திரவத்தைச் சுமத்தும்படியாக தமஸ்குவுக்கு வந்த மனிதர் உபத்திரவத்தைச் சுமக்க வேண்டிய தாயிருந்தது. கர்த்தர் நம்மை அவருக்கு ஊழியம் செய்யும்படி அழைக்கும் போதெல்லாம், நாம் உபத்திரவப்படும்படியும் அழைக்கின்றார் என்பதில் எவ்வித மாறுதலும் இல்லை (2 தீமோ. 3:12).*

*கர்த்தர் அனனியாவுக்குக் கொடுத்த கட்டளையைக் கடந்து செல்லுமுன், வசனம் 12ல் அநேக வார்த்தைகளை அடிக் கோடிடுங்கள்: "… மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன் மேல் கை வைக்கவும் தரிசனங் கண்டான்." சவுலின் மேல் அனனியா தமது கைகளை வைத்தது ஏன் என்பது பற்றி சில கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. கைகளை வைத்தது, சவுல் பார்வையடையும்படிக்கே என்பதை வசனப்பகுதி தெளிவாகக் கூறுகின்றது.*

*அனனியா இரண்டாம் முறையும் "இல்லை, முடியாது" என்று சொல்லவில்லை:*

> *அப்பொழுது அனனியா போய் வீட்டுக்குள் பிரவேசித்து, அவன் மேல் கையை வைத்து:[10] "சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் படும்படிக்கும் என்னை அனுப்பினார்" என்றான் (9:17).*

அனனியா தாம் சவுல் மீது கைகளை வைத்தது, பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பதற்காகவே என்று கூறவில்லை என்பதைக் கவனியுங்கள். ஆனால் அதற்கு மாறாக, இரண்டு நோக்கங்களுக்காக அவர் அனுப்பப்பட்டிருந்தார்: (1) சவுல் மறுபடியும் பார்வையடையும்படியாகவும் (2) சவுல் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்படியாகவும். இயேசுவால் முன்பே அறிவிக்கப்பட்டபடி, அனனியா கைகளை வைத்த செயலானது முதலாவது நோக்கத்தை நிறைவேற்றியது. அனனியா, "சகோதரனாகிய சவுலே, பார்வையடைவாயாக" என்று கூறினார் (22:13). "உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதில்கள்[11] போன்றவைகள் விழுந்தது [அந்நேரமே (அவன்) பார்வையடைந்து, அவனை ஏறிட்டுப் பார்த்தான்]" (9:18அ; இ.வ. 22:13).

பின்பு அனனியா,இயேசுவால் சாலையில் தரப்பட்டிருந்த அடிப்படையான அறைகூவலை மறுபடியும் கூறினார்:

> நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத்[12] தரிசிக்கவும், அவருடைய திருவாய் மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்து கொண்டார். நீ கண்டவைகளையும், கேட்டவைகளையும்[13] குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியா யிருப்பாய் (22:14, 15).

அனனியா கர்த்தருடைய தூதன் என்பதை, மறுபடியும் கூறப்பட்ட இந்த வார்த்தைகள் நிலை நாட்டுவதுடன், அதே வேளையில் அந்தக் கட்டளைக்கு ஒரு கனத்தைக் கொடுத்தன.

இரட்சிக்கப்படுவதற்கு சவுல் என்ன "செய்ய வேண்டும்" என்று அதுவரைக்கும் கூட சவுலுக்குக் கூறப்படவில்லை. கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடிய நிலையில் முழங்கால் படியிட்டிருந்த அந்த மனிதரைக் கண்ட அனனியா, கர்த்தருடைய அறிவுரைகளைக் கொடுத்தார்: "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு,[14] ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (22:16).

நான் ஒரு சிறு பையனாக இருந்த காலத்தில், நாமகரணக் கூட்டத்தின் எழுப்புதல்காரர்கள், "தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் சவுல் இரட்சிக்கப்பட்டது போல இரட்சிக்கப் படுங்கள்! தரிசனத்தைக் காணுங்கள், ஒரு குரலைக் கேளுங்கள்,

*ஒரு அனுபவத்தைப் பெறுங்கள்!" என்று கூவுவது பொதுவான வழக்கமாயிருந்தது. தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் சவுல் இரட்சிக்கப்பட்டிருந்தால், கர்த்தர் அதை அறியாதிருந்தார், ஏனென்றால், அவர் சவுலிடம் "நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" (9:6) என்று கூறியிருந்தார். சவுலும் அதை (தாம் இரட்சிக்கப் பட்டதை) அறியாதவராகவே இருந்தார், ஏனென்றால் அவர், "நான் என்ன செய்ய வேண்டும்?" (22:10) என்று கேட்டு, பிறகு மூன்று நாட்களாக உபவாசமிருந்து ஜெபித்தார். (அப்பொழுது அவர் இரட்சிக்கப்பட்ட மனிதராயிருந்திருந்தால், வேதவசனங் களில் இரட்சிக்கப்பட்ட மனிதர்களிலேயே மிகவும் பரிதாபத் திற்குரியவராகவே அவர் இருந்திருப்பார்!) மற்றும், தேவனால் ஏவப்பட்ட பிரசங்கியாரும் கூட அதை (சவுல் இரட்சிக்கப் பட்டதை) அறிந்திருக்கவில்லை, ஏனென்றால் அவர் சவுலிடம், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (22:16) என்று கூறினார்.*

*சவுல் இயேசுவில் விசுவாசங் கொண்டிருந்தார், ஆனாலும் அவர் பாவங்கள் இன்னும் கழுவப்பட வேண்டியதாயிருந்தது. அவர் தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பியவராயிருந்தார்,[15] ஆனாலும் அவரது பாவங்கள் இன்னமும் கழுவப்பட வேண்டியதாயிருந்தது. அவர் கிறிஸ்துவை "ஆண்டவரே" என்று அறிக்கை செய்திருந்தார், ஆனாலும் அவர் பாவங்கள் இன்னமும் கழுவப்பட வேண்டியதாயிருந்தது. தேவனுடைய செய்தியாளர் கூறியபடி, அவர் - தண்ணீரில் முழுகுதலாகிய - ஞானஸ்நானம் பெறாத வரையிலும் அவரது பாவங்கள் கழுவப்படுவதில்லை.*

*தமஸ்குவின் தண்ணீரானது பாவங்களைக் கழுவக் கூடிய விசேஷித்த வல்லமையுடையதாக இருந்தது என்று இதற்கு அர்த்தமல்ல. சவுல் ஞானஸ்நானம் பெற வேண்டிய அதே தண்ணீர்தான் தமஸ்குவில் குடியிருப்பவர்களால் தங்கள் உணவைச் சமைக்கவும், அவர்களின் துணிகளைத் துவைக்கவும் பயன்படுத்தப்பட்டது. நமது பாவங்கள் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படுவதாக வேதவசனங்கள் வலியுறுத்து கின்றன (வெளி. 7:14; இ.வ. வெளி. 1:6). இயேசுவின் இரத்தமே நமது பாவங்களைக் கழுவுகின்றது; ஞானஸ்நானத்தின்*

பொழுது அவரது இரத்தம் நமது பாவங்களைக் கழுவுகின்றது.

தேவனிடத்தில் ஜெபிப்பதே, விலகியிருக்கும் பாவி இரட்சிப்படைவதற்குரிய வழி என்பதாகச் சிலர் கூறுகின்றனர். இரட்சிக்கப்படுவதற்கு ''பாவிகளின் ஜெபத்தை''[16] பவுல் ஜெபிப்பது தேவையாயிருந்தால், அனனியா அவரிடத்தில் வரும்போது அவர் (சவுல்) சரியான சரீர நிலையிலேயே இருந்தார் என்றாகின்றது. ஆனால் அந்தப் பிரசங்கியார் அவரிடத்தில் வந்து, ''தாமதிப்பதை நிறுத்து! முழங்கால் படியிட்டிருப்பதிலிருந்து எழுந்து நில்! ஜெபிப்பதை நிறுத்தி, கீழ்ப்படியத் தொடங்கு'' என்றல்லவா கூறினார்! பாவிகள், தேவனிடத்தில் தங்களிடம் அன்பு காட்டும்படி அல்லது இரட்சிக்கும்படி கேட்பதென்பது ''தாமதித்தல்'' ஆகும், ஏனென்றால் தேவன் பாவிகள் மேல் அன்புகூருதல் அல்லது அவர்களின் இரட்சிப்பிற்கான செயல்கள் யாவற்றையும் செய்திருக்கின்றார் (யோவா. 3:16). இப்பொழுது கீழ்ப்படிதலில் பதில்செயல் செய்வதென்பது பாவிகள் செய்ய வேண்டியதாக இருக்கின்றது, அது அவர்களைச் சார்ந்ததாகும். "நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு."[17]

## தயக்கமற்று மனம் மாறியவர் (9:18, 19; 26:19)

முடிவெடுத்தல் என்பது சவுலுக்குக் கடினமாயிருந்தது. ஒருவர், தாம் தவறு செய்திருப்பதை ஒத்துக்கொள்வதென்பது எப்பொழுதுமே கடினமானதுதான்.[18] அனனியா கட்டளை யிட்டதைச் செய்வதென்பது இன்னமும் மிகக் கடினமா யிருந்தது. ஞானஸ்நானம் என்பது தன்னிலே கடினமானதாய் இருப்பதில்லை. சடங்காச்சாரமான கழுவுதல் மற்றும் முழுகுதல் ஆகியவற்றிற்குச் சவுல் பழக்கப்பட்டவராகவே இருந்தார். இயேசுவின் "நாமத்தைத் தொழுது கொள்ளுதல்" என்பதே கடினமான பகுதியாகும். "அவருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல்" என்பது அவரை (இயேசுவை)க் கிறிஸ்து என்று ஒப்புக் கொள்வதை ஈடுபடுத்தியது. அதாவது, சவுல் இயேசுவைக் கர்த்தரென்று ஒப்புக் கொண்டு, அவரது (இயேசுவின்) அதிகாரத்தில் ஞானஸ்நானம் பெற்று, எஞ்சி

*யுள்ள தமது வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டிய தாயிருந்தது! சவுல் தமக்கு மிகவும் நெருக்கமாகவும் விருப்பமாகவும் இருந்த தமது குடும்பம், நண்பர்கள், புகழ் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றிலிருந்து திரும்ப வேண்டியிருந்தது என்பதே இதன் அர்த்தமாகும்.*

*இந்த முடிவு கடினமானதாயிருந்தாலும், சவுல் என்ன "செய்ய வேண்டும்" என்பதை அனனியா அவரிடத்தில் கூறியபோது, சவுல் தயங்கவில்லை. பின்னாளில் அவர் அகிரிப்பா அரசரிடம், "நான் அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை" (26:19) என்று கூறினார். உடனே அவர், "எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றார்" (9:18). சவுல் முழுக்காட்டப்பட்ட இடம் பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை, ஆனால் ஆப்னா நதியானது அந்த நகரத்தின் ஊடாக ஓடியது, பர்பார் நதி அருகாமையிலேயே இருந்தது (2 இரா. 5:12).*

*செய்ய வேண்டிய செயல் செய்யப்பட்டது; சவுலிடத்தில், பின்வாங்கிப் போகுதல் என்பது இருக்கவில்லை. அவர் பின்னாளில்,*

> *ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன் (பிலி. 3:7, 8).*

*சவுல் ஞானஸ்நானம் பெற்றபோது அவரது பாவங்கள் இயேசுவின் இரத்தத்தினால் கழுவிப் போக்கப்பட்டன. "பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கு"[19] என்ற அனனியாவின் வார்த்தைகள் நிறைவேறும்படியாக, சவுல் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெற்றார் (2:38). மேலும் அவர், தாம் அழிக்க முயற்சி செய்து கொண்டிருந்த சபையில் கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்பட்டார் (2:41, 47). சவுல் கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனைப் பெற்றார்! தமது இறந்த காலத்தை ஞானஸ்நானம் என்ற தண்ணீர் சமாதியில் புதைத்ததாகப் பின்னாளில் அவர் கூறினார்:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்*

*ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் ... பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 6:3-6).*

*சந்தோஷமான இருதயத்தோடே, சவுல் கடந்த மூன்று நாட்களில் முதன்முறையாக "போஜனம் பண்ணிப் பலப் பட்டான்" (9:19அ).*

*"ஏன் இந்த சவுல்?" என்று நாம் கேட்கலாம். உலகத்திலிருந்த எல்லா மக்களிலிருந்தும், புறஜாதியாருக்கு அப்போஸ்தல ராயிருக்கும்படி, மனிதர்களைக் கொலை செய்திருந்த இந்த சவுலைக் கர்த்தர் தேர்ந்தெடுத்தது ஏன்? பர்னபா போன்ற மாபெரும் கிறிஸ்தவர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத் திருக்க அவரால் முடியுமே. கிறிஸ்தவரல்லாத ஒருவரை அவர் அழைக்க விரும்பியிருந்தால், சவுலின் அட்டூழியங்கள் போன்ற குற்றமில்லாத, தேவபயமுள்ள யூதர்கள் அநேகர் இருந்தார் களே. எதற்காக சவுல்?*

*கர்த்தருடைய சிந்தையை நாம் பெற்றிராததால் (ஏசா. 55:8, 9), இந்தக் கேள்விக்கு முழு நிச்சயத்துடன் நாம் பதில் அளிக்க முடியாது - ஆனால் கற்றறிந்த யூகங்கள் சிலவற்றை நாம் ஏற்படுத்த முடியும். சவுலின் தனிப்பட்ட பண்புகள் - அவரது அறிவுடைமை, அவரது வைராக்கியம், அவரது சக்தி - ஆகியவை நிச்சயமாகவே ஒருகாரணியாக இருந்தது. இவை யாவும் சரியான திசையில் செலுத்தப்பட்டால், அது எவ்வளவு நன்மையாயிருக்கக் கூடும்! அவர் தமது முந்திய வாழ்வைத் தர்சுப் பட்டணத்தில் வாழ்ந்திருந்ததால், பலஸ்தீனத்தில் வளர்ந்த எவரொருவரைக் காட்டிலும் அதிகமாக அவர் புறஜாதியாரின் மனநிலையைப் புரிந்து கொண்டிருக்க முடியும் என்பதும் அவர் தெரிந்து கொள்ளப்பட்டதற்கு ஒரு காரணமாயிருக்கலாம். அவர் சரியான வேலைக்குச் சரியான நபராக இருந்தார்.*

*மற்ற காரணிகள் கர்த்தருடைய தெரிவில் ஈடுபட்டிருக்கச் சாத்தியக் கூறுள்ளது. எடுத்துக்காட்டாக, யூதமார்க்கம் மற்றும்*

கிறிஸ்தவம் ஆகியவற்றிற்கிடையே எவ்விதமான உடன்படிக்கையும் ஏற்பட முடியாது என்ற சவுலின் உறுதிப்பாடானது கிறிஸ்தவத்தை அழிக்கும்படி முயற்சி செய்வதற்கு அவரை வற்புறுத்தியது. அவர் கிறிஸ்தவரான போது அந்த உறுதிப்பாட்டின் தன்மையைத் தக்க வைத்துக் கொண்டார். கிறிஸ்தவ மதமானது விட்டுக் கொடுக்கப்பட முடியாததாகும் என்ற சத்தியமே அவரது நிருபங்களில் நிறைந்துள்ளன.

சாத்தியமான இன்னொரு காரணியைக் குறிப்பிட வேண்டும், இது இயேசுவின் பின்வரும் வார்த்தைகளில் மறைமுகமாய்க் காணப்படும் காரணியாகும்: "எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்பு கூருவான்" (லூக். 7:47). (இதில், "எவனுக்கு அதிகமாய் மன்னிக்கப்படுகிறதோ, அவன் அதிகமாய் அன்புகூருவான்" என்ற கருத்து மறைமுகமாயுள்ளது.) சாலையில் சவுலுக்குக் கிறிஸ்து தரிசனமான போது, சவுல் திடீரென்று தமது பாவத்தின் மாபெரும் அளவை உணர்ந்தார். அவர் தேவதூஷணக் குற்றம் செய்திருந்தவராய், மரணத்திற்குப் பாத்திரராகவே இருந்தார்! கர்த்தர் அவரை மன்னிக்கச் சித்தமுள்ளவராயிருந்து, அவரது எஞ்சிய வாழ்வில் அற்புதங்களை நிரப்பவும் விரும்பினார். அவர் (சவுல்) "என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரன்" (கலா. 2:20) என்று எழுதினார். மேலும் அவர்,

> என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; ... பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான் (1 தீமோ. 1:12, 13, 15)!

அதிகமாய் மன்னிக்கப்பட்டவர் அதிகமாய் அன்புகூர்ந்தார் -ஒரு காலத்தில் தாம் அழிக்க முயற்சி செய்த அந்த விசுவாசத்தையே அகில உலகிலும் பரப்புவதற்காக அவர் தமது எஞ்சிய வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார்!

## முடிவுரை

*இடமிருந்திருந்தால், கர்த்தருக்காகத் தமது திறமைகளை உடனடியாகப் பயன்படுத்தத் தொடங்கிய (9:19-31) சவுலின் "அழிவற்ற ஒரு ஒப்புக்கொடுத்தலைப்" பற்றியும் நாம் இங்கு கூறியிருக்க முடியும், ஆனால் இந்தத் தலைப்பை பின்வரக் கூடிய நமது படிப்பிற்காக விட்டு வைக்க வேண்டும். இப்பொழுது நாம் இப்பாடத்தை முடிக்க வேண்டும்.*

*இவ்வாறு முடிக்கையில், இப்பாடத்தின் துவக்கத்தில் நாம் விவாதித்த கருத்துக்கு மறுபடியும் திரும்புவோம்: ஜெஃப்ரீ தாமரும், தர்சுப் பட்டணத்தானாகிய சவுலும் இரட்சிக்கப் பட்டிருக்க முடிந்ததென்றால், எவரொருவரும் இரட்சிக்கப் பட முடியும். 1 தீமோத்தேயு 1ல் பவுலே இந்தச் சத்தியத்தை வலியுறுத்தினார். "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" என்று கூறிய பிறகு, "அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன்" என்றும் கூடக் கூறினார்" (1 தீமோ. 1:15, 16).*

*உங்களின் ஆவிக்குரிய நிலை பற்றி நான் அறியவில்லை/ எனக்குத் தெரியாது. பாவத்தில் நீங்கள் எவ்வளவு ஆழமாய் வேரூன்றியிருக்கின்றீர்கள் என்பதும் எனக்குத் தெரியாது. நீங்கள் செய்திருக்கக் கூடிய பயங்கரமான பாவங்கள் என்ன என்பதும் எனக்குத் தெரியாது. ஆயினும் இதை நான் அறிவேன்: உங்கள் பாவங்கள் பவுலின் பாவங்களைக் காட்டிலும் மோசமானவைகள் அல்ல. உங்கள் குற்றம் பெரியதே அல்ல. உங்கள் ஆத்துமாவை இரட்சிப்பதற்குக் கர்த்தருடைய இரக்கமும் கிருபையும் போதுமானவைகளாயிருக்கின்றன. ஆகையால், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதை நீங்கள் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தால், இனியும் தாமதிக்காதீர்கள். "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (22:16)!*

## ❦ பிரசங்கக் குறிப்புகள் ❦

அனனியாவைப் பற்றிய ஒரு ஆர்வமிக்க பிரசங்கத்தைப் பிரசங்கிக்க முடியும். "யாரோ ஒரு சீஷன்" என்பது இதற்கான ஒரு நல்ல தலைப்பாயிருக்கும் (9:10). பதிவுகளின்படி பார்த்தால் அவர், சபையின் "ஒரு சாதாரண உறுப்பினராகவே" இருந்திருக்கின்றார், ஆயினும் தேவனால் அவர் ஒரு அற்புதமான வழியில் பயன்படுத்தப்படத் தயாராய் இருந்தார் என்ற கருத்தைக் குறிப்பிட வேண்டும்.

---

குறிப்புகள்

[1]அவர் பார்வையற்றவராய், இழந்து போகப்பட்டவராய், என்ன செய்வதென்று அறியாதவராயிருந்தார். "இருளில் விட்டு வைக்கப்படுதல்" என்பது "அறியாமையில் விட்டுவைக்கப்படுதல்" என்று அர்த்தப்படும் உருவக நடையுரை ஆகும். அந்த மூன்று நாட்களில், அனனியா தம்மிடத்தில் வருவார் என்பதாக அவர் பெற்ற தரிசனம் ஒன்று தான் அவருக்கு வெளிச்சமாயிருந்தது (9:12). [2]மூன்று நாள் இப்படி இருளில் விடப்பட்டதென்பது தண்டிப்பதற்கான ஒரு வழியாகும் என்பதாகச் சிலர் யோசிக்கின்றார்கள், அதாவது, "சவுல் தமது பாவத்தைப் பற்றி மறுபடியும் நினைத்துப் பார்க்கும் நேரமாக" இது இருந்தது என்கின்றார்கள். அந்த மூன்று நாட்களிலும் சவுல் உபத்திரவம் அடைந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை, ஆனால் இதுவேதான் தாமதத்திற்குக் காரணமாகும் என்று கூறுவது கர்த்தருடைய கிருபையுள்ள தன்மைக்கு ஏற்புடையதல்ல. [3]கர்த்தருடைய செய்தியை அனனியா சவுலுக்குக் கொடுத்தார் என்ற வகையில் நான் இவ்விடத்தில் "பிரசங்கியார்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறேன். அனனியா ஒரு முழுநேர சுவிசேஷகரா யிருந்தார் என்பதற்கு எவ்விதமான சுட்டிக் காட்டுதலும் இல்லை. [4]"அனனியா" என்ற பெயர் "யேகோவா கிருபையாயிருக்கிறார்" என்ற அர்த்தம் தருவதாகும், தேவனுடைய கிருபையைச் சவுலுக்கு வெளிப்படுத்திய ஒரு மனிதருக்கு இது மிகவும் தகுதியான பெயரே ஆகும். [5]கிறிஸ்தவத்திற்கு மாறுமுன்பே அவர் ஒரு நல்ல யூதராக இருந்தார், அவர் இன்னமும் யூதர்களால் மதிக்கப்பட்டவராயிருந்தார். யூதர்கள் அவர்மேல் வைத்திருந்த மரியாதையானது, சவுலின் மனமாற்றத்தைக் குறித்து அவர் தரும் சாட்சியத்தின்மேல், யூத சமுதாயத்தினரிடையில் ஒரு நன்மதிப்பைப் பெற்றுத்தரும் என்பதற்காக ஒருவேளை அவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கலாம். [6]சவுல் எருசலேமில் செய்திருந்ததை "கேள்விப்பட்டவராக" மட்டுமே அனனியா இருந்ததால், அப். 8ல் சிதறப்பட்டவர்களில் அவர் ஒருவராயிருக்க மாட்டார் என்பது உறுதி. சிதறப்பட்டவர்களில் ஒருவரால் அவர் (அனனியா) மனம் மாற்றப்பட்டிருந்திருக்கலாம். [7]"பாத்திரம்" என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையானது மதிப்புயர்ந்த (சவுல் என்ற) பாத்திரத்தையும், அதில் இடப்படுகின்ற விலையேறப்பெற்ற (சுவிசேஷம் என்ற) நற்பொருளையும் குறிக்கின்றது. பின்னாளில் இந்த உருவகத்தைத் தழுவி எழுதிய பவுல், தம்மை மிகத்

தாழ்மையான பாத்திரமாகச் சித்திரித்துக் கொண்டார் (2 கொரி. 4:7). [8]அப். 25:11, 12. அந்த சமயத்தில் அரியணையில் நீரோ இராயன் வீற்றிருந்து ஆளுகை செய்தான், நீரோவின் முன்பு பவுல் விசாரிக்கப்படுவதற்கு முன்னதாகவே அப். நடபடிகள் புத்தகம் முடிவடைகின்றது, ஆனால் கர்த்தர் பவுலுக்கு கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தினால் இது நடந்ததென்பதாகவே நாம் அறிகின்றோம் (27:23, 24). [9]கர்த்தருடைய அறைகூவலை ஏற்றுக்கொள்வதற்கு முடிவெடுத்தால், சவுல் என்ன எதிர்பார்க்க முடியும் என்பது பற்றி இயேசு ஒரு தவறான சித்தரிப்பை முன் வைக்கவில்லை. நாமும் கூட கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் மக்கள் துன்பங்களே இல்லாத வாழ்க்கையைப் பெறுவார்கள் என்ற கருத்தில் அவர்களை வழிநடத்தக் கூடாது (14:22 ஐக் கவனிக்கவும்). சவுலின் உபத்திரவங்கள் பற்றி இயேசுவின் வார்த்தைகளின் ஒரு பகுதி நிறைவேற்றத்தை 2 கொரி. 11:23-28ல் காணவும். [10]"அனனியா குணமாக்கும் வல்லமையை எப்படிப் பெற்றார்" என்று யூகம் செய்வது தேவையற்றதாகும். இந்த சரீர குணமாக்குதல் என்பது அற்புதமல்ல. பார்வை யிழந்தது இயற்கைக்கு அப்பாற்பட்டாதாயிருந்து போலவே, பார்வை மீண்டும் பெற்றதும் இருக்கின்றது. அனனியா தாம் செய்தது மற்றும் கூறியது எல்லாவற்றிலும், அவர் கர்த்தருடைய முகவராகவே இருந்தார். இது இயேசுவே பேசி, செயல்பட்ட நிகழ்ச்சியாகவே இருக்கின்றது.

[11]"மீன் செதிள்கள் போன்றவை" "விழுந்தன" என்ற சொற்றொடர்கள், சவுல் மறுபடியும் பார்வையடைந்த போது நடந்தவைகளை அங்கிருந்தவர்கள் பார்க்க முடிந்திருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. [12]"நீதிபரர்" என்பது இயேசுவைக் குறிப்பிடுகின்றது (3:14; 7:52). [13]"நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து ... சாட்சியாக இருப்பாய்" என்ற சொற்றொடரானது "சாட்சி" என்ற வார்த்தைக்கு வேதாகமத்தின் மிகச் சிறந்த விளக்கத்தின்படியான அடிப்படை அர்த்தத்தைத் தரும் விளக்கங்களில் ஒன்றாகும். [14]"கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வது" என்பது கிறிஸ்துவே எல்லாமுமாக இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்வதாக இருக்கின்றது. ஞானஸ்நானத்தின்போது இது குறிப்பிட்டுக் காட்டுகின்ற சில வழிகள் பின்வருமாறு: (1) ஞானஸ்நானத்திற்கு முன்பு அவரது நாமத்தை அறிக்கையிடுதல் (2) ஞானஸ்நானத்தின் பொழுது அவரது நாமத்தைத் தொழுது கொள்ளுதல். ஞானஸ்நானம் பெற்ற பிறகு நாம் தொடர்ந்து "அவருடைய நாமத்தைத் தொழுது கொள்ள வேண்டும்'' (9:14ல் கிறிஸ்தவர்களுக்கான விளக்கத்தைக் காணவும்; மத். 10:32, 33ஐயும் காணவும்). [15]சவுல் மூன்று நாட்களாகத் தேவனுக்கேற்ற துக்கமடைந்திருந்த நிகழ்ச்சியானது, அவர் தமது பாவங்களிலிருந்து மனந்திரும்பியிருந்ததற்கு ஆதாரமாகும். [16]''பாவிகளின் ஜெபம்'' என்று அழைக்கப்படும் ஜெபமானது வேதவசனங்களினால் அறியப்படாத ஒரு ஜெபமாகும், இது இயேசுவை இரட்சகர் என்று ஒப்புக்கொண்டு, தேவனிடத்தில் மன்னிப்பை வேண்டுவதாக உள்ளது. இது தேவனால் அல்ல, மனிதர்களால் உண்டாக்கப்பட்ட ஒரு ஜெபமாகும். [17]தலையின்மேல் சிறிது தண்ணீர் தெளிக்கப் பட்டோ அல்லது ஊற்றப்பட்டோ ஒருவர் ஞானஸ்நானப்படுத்தப்பட முடியும் என்பதாகச் சிலர் கூறுகின்றார்கள். விஷயம் அப்படியிருக்குமென்றால், "எழுந்து, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்'' என்று அனனியா கூறிய போது சவுல் தமது சரீரத்தில் சரியான நிலையிலேயே இருந்தார் (அவ்விடத்திலேயே அவர் மீது சிறிது தண்ணீரைத் தெளித்தோ அல்லது ஊற்றியோ இருக்கலாமே). சவுல் எழுந்து வேறிடத்திற்குச் சென்று ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்தது - ஏனென்றால் "baptism" ஞானஸ்நானம் என்ற வார்த்தை முழுக்காட்டப்படுதல் என்ற அர்த்தமுள்ளதாயிருக்கின்றது. [18]தாங்கள் தவறு செய்துள்ளோம் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வதற்கு முன்பாகவே பலர் மரித்துப் போவார்கள் என்று

அவர்களுக்காக ஊழியம் செய்த எனது நண்பர் ஒருவர் கூறுகிறார். [19]"நிரப்பப்படுதல்" என்றால் "கட்டுப்படுத்தப்படுதல்" என்று அர்த்தமாகும். இது அற்புதம் என்ற வகையிலோ அல்லது அற்புதமற்றது என்ற வகையிலோ பயன்படுத்தப்பட முடியும் (எபே. 5:18). சவுல்/பவுல் ஒரு குறிப்பிட்ட அளவு அற்புதமான விதத்தில் "ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்" (9:22 க்கான உரையைக் காணவும்). அனனியா சவுலினிடம் வந்தபோது, அவர் (சவுல்) அற்புத வரத்தைப் பெற்றுக் கொண்டாரா அல்லவா என்பது பற்றி நாம் எதுவும் கூற முடியாது, ஆனால் சவுல் ஞானஸ்நானம் பெறுகையில் பரிசுத்த ஆவியானவரை நிச்சயமாகவே ஒரு வரமாகப் பெற்றுக் கொண்டார். "ஆவியினாலே நிரப்பப்பட்டு" என்று கூறுகையில் அனனியா உள்ளாக வாசம் செய்யுமளவுக்குக் கிடைக்கும் பரிசுத்த ஆவியானவரின் வரத்தையே தனது எண்ணத்தில் கொண்டு கூறினார் என்பதே பாதுகாப்பான வாதமாகும்.